இருக்கட்டும், நிலம் தங்கள் பெயரில் இருக்கட்டும் என்று கருதுகிறார்கள். ஆகவே, அதை மாற்றிக் கொடுக்கவேண்டுமென்று முயற்சி எடுத்தால் வீண் தகராறுதான் ஏற்படும். அரிசனங்களுக்கு புறம்போக்கு நிலங்களைக் கொடுக்கவும், வேறுபல இடங்களைத் தனியார் நிலமாக இருந்தால் அவற்றை வாங்கிக் கொடுக்கவும் அரசு நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டுதான் வருகிறது.

திருமதி கே. பி. ஜானகியம்மாள் : அரிசன மக்கள் குடிதண்ணீர்க் கிணற்றுக்கும், மயானத்திற்கும் செல்வதற்கான பாதையில் தனிப்பட்டோர் நிலங்கள் இருக்கும் நிலையில் பாதை இல்லாத நிலையில் பல கிராமங்களில் கஷ்டப்படுகிறார்கள். இப்படிப்பட்ட இடங்களில் அந்த நிலங்களைக் கட்டாய ஆர்ஜிதம் செய்து அரிசனங்களுக்குப் பாதை வசதி செய்து கொடுக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அதைத் தான் நான் திருப்பித் திருப்பிச் சொல்லுகிறேன். அரசாங்கம் கட்டாயமாக எடுக்க முன்வரும்போது சச்சரவுகள் ஏற்படுகின்றன. அந்த நோக்கில் மாண்புமிகு உறுப்பினர்களைப் போன்றவர்கள் அந்தந்த இடத்தில் சமாதான முறையில் தேவையான காரியங்களுக்காக அரசாங்கம் எடுக்கிறது என்பதைக் கூறி, அந்த நிலங்களை வாங்கிக் கொடுத்தால் அரசாங்கத்திற்கு நலமாக இருக்கும். பல இடங்களில் நிலச் சொந்தக்காரர்கள் பக்கம் வாதாடுகிறார்களே தவிர, அரிசனங்களுக்காக வாதாடி அந்த நிலத்தை வாங்கிக் கொடுக்க முன் வருவதில்லை. சட்டமன்றத்தில் கேள்வி கேட்கின்ற உறுப்பினர்கள் தங்கள் தொகுதியில் இந்த மாதிரி நில ஆர்ஜிதம் செய்யும்போது சமாதான முறையில் நிலத்தை வாங்கிக் கொடுக்க வழி வகை செய்தால் அரசாங்கம் மேற்கொண்டு நடவடிக்கைகளைக் காலதாமதமின்றி எடுத்துக் கொள்ள முடியும்.

Radio sets to best kept Harijan colonies

*195 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to offer radio sets to the best kept Harijan colonies in this State; and

(*b*) if so, the details thereof.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : மிகத் தூய்மையாக வைத்துக்கொள்ளப்படும் அரிசனக் குடியிருப்புகளுக்குப் பரிசு வழங்கும் திட்டம் 1960–61 ஆம் ஆண்டிலிருந்தே செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இந்தத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு வட்டத்திலும் (தாலூகாவிலும்) மிகவும் தூய்மையாக வைத்துக் கொள்ளப்படும் ஒவ்வொரு அரிசனக் குடியிருப்புக்கும் ரூபாய் முந்நூறு மதிப்புடைய ஒரு வானொலிப் பெட்டி அல்லது ஐந்து அம்பர் சர்க்காக்கள் பரிசாக வழங்கப்படுகின்றன.

1970 செப்டம்பர் 2]

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் : அரிசனங்கள் வேலை செய்து களைத்துப் போய் வரும்போது அவர்கள் சுகமாக இருப்பதற்கு வானொலிப் பெட்டிகள் சில இடங்களில் வழங்கப்பட்டாலும் பல ஊர்களுக்கு கொடுக்கப்படாமலே இருக்கிறது. அப்படிக் கொடுக் கப்படாத எல்லா ஊர்களுக்கும் வானொலிப் பெட்டிகளை ஏராள மாகக் கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இந்த வானொலிப் பெட்டி அவர்களுக்கு ஒரு பரிசாகத் தரப்படுகிறது. அவர்கள் வாழ்கின்ற கிராமப் பகுதிகள் சுத்தமாக வைத்துக்கொள்ளப் பட வேண்டுமென்பதை ஊக்குவிக்க அரசாங்கம் பரிசாக இந்த வானொலிப் பெட்டியைத் தருகிறது. மாவட்ட நலக் குழு உறுப்பினர் கள் இவைகளை எல்லாம் ஆய்வு செய்கிறார்கள். எந்தக் கிராமங்கள் சுத்தமாக வைக்கப்பட்டிருக்கின்றனவோ அவை தேர்ந்தெடுக்கப் பட்டு அந்தக் கிராமங்களுக்கு அரசாங்கம் பரிசாக வானொலிப் பெட்டிகளை கொடுக்கிறது.

ஹாஜி மா. மு. பீர்முகம்மது : ஆதித் திராவிட மக்கள் வாழ் கின்ற பேட்டைகளைத் தூய்மையாக வைத்துக் கொள்ளுவதற்காக இப்போது வட்டத்திற்கு ஒரு வானொலிப் பெட்டி வழங்கப்படுகிறது. ஒரு வட்டத்தில் இப்போது மூன்று சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதிகள் இடம் பெறுகின்றன. வட்டத்திற்கு ஒரு வானொலிப் பெட்டி என்ற நிலைமையை மாற்றி ஒரு தொகுதிக்கு ஒரு வானொலிப் பெட்டி என்ற நிலைமையை ஏற்படுத்த அரசு முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இதன் கொள்கையே சுத்தமாக வைத்திருக்கும் அரிசனக் காலனி களுக்குப் பரிசு தருவது என்பதாகும். இது எல்லா வட்டத்திலும், எல்லா அரிசன காலனிகளுக்கும் எங்கு சுத்தமாக வைத்திருக்கிறார் களோ அங்கே தரப்படுகிறது. சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் அவர்கள் பக்கத்தில் இருக்கும் காலனிகளுக்குச் சுத்தமாக வைத் திருக்கத் துணை புரிந்தால் அவர்கள் தொகுதியில் இருக்கும் காலனி களும் பரிசு பெற முடியும். கிணறு சுத்தமாக இருக்க வேண்டும். தெருக்கள் சுத்தமாக இருக்க வேண்டும். வீடுகள் சுத்தமாக இருக்க வேண்டும். குழந்தைகளை சுத்தமாக வைத்திருக்க வேண்டும். இவை களுக்காக பரிசாக வானொலிப் பெட்டி கொடுக்கப்படுகிறது.

திருமதி வி. ப. பழனியம்மாள் : தற்போது ஒரு மாவட்டத்திற்கு இந்த அளவுதான் என்று ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கை ஒதுக்கப்பட் டிருக்கிறது. அந்த எண்ணிக்கையை உயர்த்த முடியுமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இந்த ஆண்டு ஒதுக்கப்பட்டிருப்பது ரூ. 34,500. இதில் கிட்டத்தட்ட 115 வானொலி செட்கள்தான் கிடைக்கும். எந்தெந்த குடியிருப்புகள், காலனிகள், சுத்தமாக இருக்கின்றன என்று தான் கணக்கெடுக்கப் படுகிறது. மாவட்ட ரீதியாகவோ அல்லது தாலூகா ரீதியாகவோ கணக்கிடப்படுவதில்லை. மாவட்ட நலக் குழு உறுப்பினர்கள் ஆங் காங்கு சென்று பரிசீலனை செய்து பார்க்கிறார்கள். ஒரு மாவட்டத்

திற்கு ஒருக்கால் இந்த 115-ல் 50 அல்லது 60 கூட ஒரு மாவட்டத் திற்குச் செல்லக் கூடிய ஒரு நிலை இருந்தால் அப்படிக் கொடுப்பதற்கு அரசு பின்வாங்காது.

நீதிமன்றங்களுக்கு கட்டடங்கள்

* 196 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) மாயூரத்தில் சப்-மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுக்கு சொந்த கட்டடம் அமைக்க அரசு உத்தேசித்துள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்பொழுது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) சப்-மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுக்கு கட்டடம் கட்டுவதற் காக வரைப்படங்களும் மதிப்பீடும் அரசுக்கு அனுப்புவதாக உயர் நீதிமன்றம் கூறியுள்ளது. அவை வந்தபின் இது விஷயம் பரிசீலிக்கப் படும்.

* 197 வினா—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருமங்கலத்திற்கான முன்சீப் கோர்ட்டுக்கு புதிய கட்டடம் எப்போது கட்டப்படும் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இதுபற்றி இன்னும் முடிவு எடுக்கப்படவில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : தற்போது இருக்கிற இந்த முன்சீப் கோர்ட் அரசாங்க மருத்துவ மனைக்குப் பக்கத்தில் இருப்பதால் அரசாங்க மருத்துவ மனை விஸ்தரிக்கப்பட முடியாமல் உள்ளது. முன்சீப் கோர்ட்டுக்கு ஒரு புதுக் கட்டடம் கட்ட வேண்டும் என்ற கோரிக்கைக்கு மதுரைக்கு மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் வந்திருந்தபோது திருமங்கலத்துக்கு அவர்கள் நேரடியாக வந் திருந்து எந்த இடத்தில் கட்டவேண்டுமென்று அந்த இடத்தையும் அவர்கள் பார்வையிட்டார்கள். திருமங்கலத்தில் அமைச்சரிடம் நான் நேரில் இந்த ஒரு கோரிக்கையை வலியுறுத்தியபோது, விரை வில் ஆவன செய்வதாக அமைச்சர் அவர்கள் உறுதியளித்திருக் கிறார்கள். இப்போது கட்டவில்லையே என்றாலும் இனிமேலாவது அதற்கு ஒரு புதிய கட்டடம் கட்டுவதற்கு அரசாங்கம் தக்க முயற்சி களை முனைந்து எடுத்துக்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போது முன்சீப் கோர்ட் டுக்கு ஒரு தனி கட்டடம் இருந்து வருகிறது. ஆகவே, முன்சீப் கோர்ட்டுக்கு வேறு ஒரு கட்டடம் கட்டுவது என்ற பிரச்னை இல்லை. இது மருத்துவ மனைக்குப் பக்கத்தில் இருப்பதால் இதை வேறு இடத்திற்கு மாற்றலாமா என்று ஆலோசிக்கப்பட்டது. இரண்டு